
# திராவிடத்தால் வாழ்கிறோம்

960

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

திரைக்கதை வசனம்
# கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

28




# ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிரான குரல்!





**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

கலைஞரின், 'திரும்பிப் பார்' திரைப்படம் 1950-களின் காலகட்டத்தில் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளான தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் சார்பாக, நின்று பேசிய திரைப்படம். ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்பதுடன், சமத்துவத்தையும் சமதர்மத்தையும் பிரச்சாரம் செய்திருக்கும்.

திரைப்படத்தின் தொடக்கக் காட்சியிலேயே பூமாலை (பண்டரிபாய்) ஒரு பெரிய மாளிகையின் உள்ளே கரும்பலகையில் தமிழ் எழுத்துகளை எழுதிக் காட்டி சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறாள். அந்த சத்தத்தினால் தனது தூக்கம் கலைந்து எழுந்து வரும் பரந்தாமன் (சிவாஜி கணேசன்) தனது அக்காளிடம் "இது என்ன வீடா? அல்லது சத்திரமா?" எனக் கோபப்படுவான். அப்போது அவர்களுக்குள் நடக்கும் உரையாடலில் அன்பு, தொண்டு, அறம் ஆகியவை குறித்து விவாதம் நடக்கும்.

இருவருக்குமான பண்பு வேறுபாடு, பரந்தாமனின் சுயநல வெறி, சுகபோகத்தில் திளைக்கும் மனம் ஆகியவற்றை அறிந்து அவன், மனித மிருகம் என்பதைச் சொல்லாமல் சொல்லும் அந்தக் காட்சி.

அடுத்த காட்சியில், கருடன் பதிப்பகத்துக்கு வந்து, தனது **'இல்லற ஜோதி'** நாவலை அபகரித்ததை எதிர்த்து, பாண்டியன் குரல் கொடுக்கிறான். இதுதொடர்பாக, பரந்தாமனுக்கும் பாண்டியனுக்கும் இடையிலான உரையாடலில் அறிவுத் திருட்டு தொடர்பாக, கலைஞரின் கருத்துகள் சில எழுத்துத் திருடர்களைத் தோலுரித்துக் காட்டும் விதமாக இருக்கும்.

### பாட்டாளியின் குரல்

மற்றொரு காட்சியில், சிவசக்தி மில் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு நடத்தும் போராட்டத்தைப் பயன்படுத்தி 'பாட்டாளியின் குரல்' என்று பரந்தாமன் எழுதிய புத்தகம் மேஜையில் இருக்கிறது. ஆனால், பரந்தாமனின் பெட்டி படுக்கைகளைத் தூக்கி வந்த தொழிலாளிக்கு எட்டணாவைத் தூக்கி மேஜையில் போடுகிறான் பரந்தாமன்.

**தொழிலாளி:** இவ்வளவு பெரிய சுமையை, எங்கிருந்து தூக்கிட்டு வர்றேன். ஒழுங்கா காசு கொடுங்க...

**பரந்தாமன்:** யேய் எட்டணாதான்! மரியாதையாப் போடா நான்சென்ஸ். தொழிலாளியாம்ல தொழிலாளி ஓடுறா...

**கருடன்:** குடுக்குற காச வாங்கலைன்னா... இந்தப் பயல்களை இப்படித்தான் ஒதைக்கணும்.

மேஜையின் மீதுள்ள 'பாட்டாளியின் குரல்' புத்தகத்தின் மீது கேமரா குவிகிறது. 'பாட்டாளியின் குரல்' புத்தகம் எழுதிய எழுத்தாளனின் இலட்சணத்தை, இக்காட்சியும் கலைஞரின் வசனங்களும் எடுத்துச் சொல்கின்றன.

அடுத்து சிவசக்தி மில் தொழிலாளர் போராட்டத்தில் பரந்தாமனும் கருடனும் கலந்துகொள்கின்றனர். அப்போது தொழிற்சங்கத் தலைவர் புண்ணியகோடி பரந்தாமனை தொழிலாளர்களிடம் பேச வைப்பார்.

**பரந்தாமன்:** காடுவெட்டி, கழனி திருத்தி, காலையிலே மாடோட்டி கலப்பை எடுத்துச் சென்றதால், மனமொடிந்த பாட்டாளியும் சித்தம் சோர்ந்து நித்தம் நித்தம் உழைக்கும் பஞ்சாலைத் தொழிலாளியும் புத்தம் புதிய வாழ்வு பெற வேண்டும் என்பதே எனது நோக்கம், ஏழைகள் பசி என்று கூறினால், என் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறது. அவர்கள் கண்ணீர் விட்டால், என் ரத்தமெல்லாம் கொதிக்கிறது... என்று பேசுகிறான். பரந்தாமனின் இந்தப் பேச்சைக் கேட்டு நம்பி, தொழிலாளர்கள் ஏமாறுகிறார்கள். மில் முதலாளியிடம் பணத்தை வாங்கிக்கொண்டு பரந்தாமன் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்கிறான்.

### புதிய துரோகிகள்

பரந்தாமனின் துரோகத்தை அறிந்துகொள்ளும் பாண்டியன் தொழிலாளர் மத்தியில் தோன்றிப் பேசுகிறான்.

**பாண்டியன் :** இப்படி தொழிலாளி வர்க்கத்துக்குத் தொண்டு செய்வதாகக் கூறிக்கொண்டு ஒரு சில துரோகிகள் புறப்பட்டிருக்கிறார்கள். உழைத்து உழைத்து ஓடாகிப்போன உத்தமர்களின் மிச்சமிருக்கும் இரத்தத்தையும் அட்டை போல உறிஞ்சிக் கொழுத்துக் கொண்டிருக்கும் அந்த அக்கிரமக்காரர்களை உங்கள் மத்தியிலே நடமாட விடாதீர்கள். புகழும் பணமும் மட்டும் சம்பாரிக்கிற போலித் தலைவனை நம்பாதீர்கள்.



பலாத்காரமற்ற விடுதலைக் கிளர்ச்சியைப் பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் மறுக்க மாட்டான். ஆனால், அடிப்படை இல்லாத கிளர்ச்சி அடியற்ற நெடுமரம் எனச் சாய்ந்து விடும். படாடோபம், பத்திரிகை விளம்பரம், பரந்தாமனுக்கு ஜே... இந்தப் பகட்டுகளால் பாட்டாளிகளின் தலைவராகிவிட முடியாது... என்று உரையாற்றுகிறான்.

இந்த உரையைக் கேட்டுப் பரந்தாமனைப் பற்றி அறிந்து கொள்ளும் தொழிலாளர்கள் அவனைப் புறக்கணிக்கின்றனர். இவ்வாறு தொழிலாளர்களை ஏய்த்தும், அவர்களுக்குத் துரோகம் செய்தும், சுகபோக வாழ்வு வாழும் பரந்தாமன் அதே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களாலும் எதிர்க்கப்படும் நிலைக்கு ஆளாகிறான்.

இந்த இடத்தில், கலைஞரின் மிகச்சிறப்பான வசனத்தில் அமைந்த மிகவும் முக்கியமான ஒரு காட்சியையும் எடுத்துக்காட்ட வேண்டும். அதாவது, தொழிலாளர் தலைவர் என்பவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை, பாண்டியன் மூலமாக எடுத்துச் சொன்னதுடன், முதலாளியும் தொழிலாளர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பாடம் சொல்பவராகவும் இருக்கிறார் கலைஞர்.

சிவசக்தி மில் முதலாளிக்கும் அவரது மகள் டாக்டர் உஷாவுக்கும் (சரஸ்வதி) இடையில் நடக்கும் உரையாடல் இது;

**மில் முதலாளி :** ஒருவன் தொலைந்தான் என்று பெருமூச்சு விட்டேன். இன்னொருவன் முளைக்கிறான் ம்... பாண்டியன்.

**உஷா:** எல்லோரையும் பரந்தாமனைப் போல நினைத்து, பணத்தால் அடித்துவிட முடியுமா? இலட்சியத்தில் உறுதியுடையவர்கள் இரும்புப் பெட்டிக்குத் தலைவணங்க மாட்டார்களப்பா.

**முதலாளி:** நீ சும்மா கிட உஷா, உனக்கு ஒன்றும் தெரியாது.

**உஷா:** ஏன்பா, லேடி டாக்டருக்கு உலக விசயம் தெரியாதுன்னு உங்கள் அபிப்பிராயமா?

**முதலாளி:** லேடி டாக்டர்! தொழிலாளர், தொழிலாளர் என்று தொல்லை கொடுத்து ஆயிரக்கணக்கில் எனக்கு நஷ்டத்தை உண்டாக்குகிறார்களே, அந்த மனவேதனைக்கு மருந்து கொடுக்க முடியுமா உன்னால்?

**உஷா:** ஓ! கொடுக்க முடியும் ஆனால், இந்த மருந்தை இருதயம் என்ற இலையில் வைத்து இரக்கம் என்ற தேனில் கலந்து சாப்பிட வேண்டும்! மருந்துக்குப் பெயர் என்ன தெரியுமாப்பா? சமதர்மம், சமத்துவம்! முதலில் கொஞ்சம் கசப்பாயிருக்கும் பிறகு சரியாகிவிடும்.

**முதலாளி:** உஷா....

**உஷா:** ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? தொழிலாளரின் குறைகளைக் கவனியுங்கள். எல்லாம் அடங்கி விடும்".

திராவிட இயக்கத்தின் கொள்கையை, கலைஞர் எத்தனை நயமாக எடுத்துரைக்கிறார் பாருங்கள். இறுதியாக, சிவசக்தி மில் முதலாளி (திருப்பதிசாமி), பாண்டியனின் கோரிக்கையை ஏற்று, வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வது மட்டுமில்லாமல், தொழிற்சாலை நிர்வாகத்தையும் அவர்களிடமே ஒப்படைக்கிறார்.

**பாண்டியன்:** தோழர்களே சிவசக்தி மில் இன்று முதல் ஜனசக்தி மில்லாக மாறும். சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி, சமத்துவம் கொழிக்கும், சமதர்மம் திகழும், சமுதாய மறுமலர்ச்சி உருவாகும்" என்று முழங்குவான். அது திரைக்கதைக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும்தான்.

> **சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி, சமத்துவம் கொழிக்கும், சமதர்மம் திகழும், சமுதாய மறுமலர்ச்சி உருவாகும்" என்று முழங்குவான். அது திரைக்கதைக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும்தான்.**

...காட்சி விரியும்

## சாதி என்னும் கொடூரம்!




பத்திரிகையாளர் மனோஜ் மிட்டா எழுதி ஆங்கிலத்தில் 2023-இல் வெளியான 'Caste Pride: Battles for Equality in Hindu India' என்ற நூல், இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தியச் சமூகம் சாதியச் சமூகம் என்பதையும் அந்த சாதியம் எந்தளவுக்குக் கொடூரமானது என்பதையும் இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் எடுத்துரைத்தது. இந்தப் புத்தகம் இப்போது மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் மொழிபெயர்ப்பில் 'சாதிப்பெருமை: இந்து இந்தியாவில் சமத்துவத்துக்கான போராட்டங்கள்' என்ற தலைப்பில், எதிர் பதிப்பக வெளியீடாகத் தமிழில் வெளியாகியுள்ளது.

பிரிட்டிஷ் காலனிய காலத்தில் உருவாக்கப்பட்ட சட்ட நடைமுறைகளும்கூட எந்தளவுக்கு சாதியை நிலைநிறுத்த உதவின என்பதை, இந்தப் புத்தகம் வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

சாதிய ஒடுக்குமுறைகளை மட்டுமல்லாது, அதை மாற்றுவதற்காக நடைபெற்ற போராட்டங்களையும் அதன்விளைவாக உருவான சட்ட மாற்றங்களையும் இந்தப் புத்தகம் ஆவணப்படுத்தியுள்ளது. குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவால் கொண்டுவரப்பட்ட சுயமரியாதை திருமணத்துக்கான சட்ட அங்கீகாரத்தையும் இந்த நூல் விரிவாக எழுதியுள்ளது. "ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் சனாதன இந்து மத- சாதிய சார்பான எதேச்சதிகார நடவடிக்கைகளுக்கு எதிரான, திராவிட அரசியல் இன்றியமையாதது என்பதை இந்நூலைப் படிக்கின்றபோது புரிந்து கொள்ள முடியும்" என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களும், "சமத்துவத்தை விரும்பும் ஒவ்வொருவருக்குமான ஆவணம்" என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அவர்களும் இந்நூல் அறிமுக விழாவில் நூல் குறித்து மதிப்பீடு செய்துள்ளனர்.

நூலின் விலை ரூ.899. நூலைப் பெற ஸ்கேன் செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் தந்த வாழ்த்துரை!



கவிச்சுடர் கவிதைப்பித்தன்

1983-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 31-ஆம் தேதி, தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து,செப்டம்பர் 10-ஆம் தேதி, புதுக்கோட்டை வந்து, என் திருமணத்தை நடத்தித் தர வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தேன். பொன்.முத்துராமலிங்கம் அவர்களும், எஸ்.எஸ்.தென்னரசு அவர்களும் மூன்று மாதங்களுக்கு முன்பே வந்து, மதுரையிலும் அதையொட்டிய பகுதிகளிலும் திருமண விழாவுக்கு செப்டம்பர் 10-ஆம் தேதியை ஒப்புதல் பெற்றுச் சென்று விட்டார்கள். "நீ பத்து நாட்கள் இடைவெளியில், திருமணத்திற்குத் தேதி கேட்கிறாயே?" என்று கேட்டு விட்டு, சிறிது யோசித்தபடியே என்னைப் பார்த்த ஆருயிர் தலைவர் அவர்கள், செப்டம்பர் பத்தாம் தேதி மாலை 6 மணிக்கு வந்து, திருமணத்தை நடத்தி வைக்கிறேன் என்று மனமுவந்து ஒப்புதல் வழங்கினார்கள். அதுபோலவே, வருகை தந்து, கழக முன்னோடிகள், நிர்வாகிகள் பெருந்திரளாக நிரம்பியிருக்க, திருமணத்தை நடத்தி வைத்து, 30 நிமிடங்கள் வாழ்த்துரையும் வழங்கி, எங்களை மகிழ்வித்துப் பெருமைப்படுத்தினார் நம் தானைத் தலைவர் அவர்கள். அந்த நிகழ்வை, வாழ்வின் பெரும் பேறாகக் கருதுகின்றோம்.

**- கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக இலக்கிய அணித் துணைத்தலைவர், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள்!

1959-ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் தி.மு.க. நேரடியாகப் போட்டியிட முடிவு செய்யப்பட்டது. சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழகத்தவர் வெற்றிக்காகப் பாடுபட கலைஞர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இதே போன்று மாவட்டங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டன. நடைபெற்ற தேர்தல்களில் கழகத்தினருக்கு மக்கள் நல்லாதரவு கொடுத்து வெற்றிபெறச் செய்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131